**டிசம்பர் – 28**

# TNPSC துளிகள்

- பாரத மிகுமின் நிறுவனமானது தமிழ்நாட்டின் நெய்வேலியில் உள்ள புதிய வெப்ப மின் திட்டத்தில் முதலாவது லிக்னைட் அடிப்படையிலான 500 மெகாவாட் வெப்ப அலகு ஒன்றை வெற்றிகரமாக அமைத்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான நீர்த் துப்புரவு மற்றும் சுகாதாரத் துறைகளில் தூய்மை இந்தியா திட்டத்தைத் திறம்பட செயல்படுத்தியதற்காக யுனிசெப் அமைப்பானது தெலுங்கானாவில் உள்ள கம்மா ரெட்டி மாவட்டத்திற்கு விருது ஒன்றை வழங்கி உள்ளது.
- நாடு முழுவதும் கடத்தல் நடவடிக்கைகளைத் தடுப்பதன் மூலம் நாட்டைப் பாதுகாப்பதற்கு வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மற்றும் பங்களிப்பை நினைவு கூறுவதற்காக மத்திய நிதித் துறை அமைச்சர் தபால்தலை ஒன்றை வெளியிட்டுள்ளார்.
- முதல் முறையாக, இந்திய ரயில்வேவானது “ஹிம் தர்ஷன் விரைவு ரயில்” என்ற ஒரு புதிய ரயிலைத் தொடங்கியுள்ளது.
    - இது கல்கா (ஹரியானா) மற்றும் சிம்லா (இமாச்சலப் பிரதேசம்) ஆகியவற்றிற்கு இடையே இயங்க இருக்கின்றது. இந்த ரயிலானது முழுவதும் புதிய ரயில் பெட்டிகளைக் கொண்டிருக்கின்றது.
- 2018 ஆம் ஆண்டிற்கான 66வது தேசிய திரைப்பட விருதுகளை 31 பிரிவுகளின் கீழ் இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர் புது தில்லியில் வழங்கியுள்ளார்.
- போரியா மஜும்தார் என்பவர் நலின் மேத்தாவுடன் இணைந்து “ஒரு பில்லியனின் கனவுகள்: இந்தியா மற்றும் ஒலிம்பிக் போட்டிகள்” என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
    - இந்தப் புத்தகமானது உலகளாவிய ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் பயணத்தைப் பற்றி விவரிக்கின்றது.
- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் 5வது சுற்று கடல்சார் விவகாரங்கள் தொடர்பான உரையாடலானது ஜப்பானின் டோக்கியோவில் நடத்தப் பட்டது.
    - டோக்கியோவில் நிகழ்ந்த இம்மாநாட்டில் இந்த உரையாடலைத் தவிர, ஆயுதக் குறைப்பு, ஆயுதப் பரவல் தடுப்பு மற்றும் ஏற்றுமதி சார்ந்த கட்டுப்பாடு ஆகியன குறித்த இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் 8வது சுற்று இருதரப்பு ஆலோசனைகளும் மேற்கொள்ளப் பட்டன.
- பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிகளுக்காக கஜகஸ்தானில் உள்ள அஸ்தானா நிதிச் சேவை ஆணையத்துடன் இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் செபி (இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்) கையெழுத்து இட்டுள்ளது.
    - பங்கு ஒழுங்குமுறையின் வரம்பில் எல்லை தாண்டிய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- மத்திய பிலிப்பைன்ஸ் பிராந்தியமானது “ஃபான்ஃபோன் சூறாவளியால்” பாதிக்கப் பட்டுள்ளது. இந்த சூறாவளி பிலிப்பைன்ஸில் “உர்சுலா” என்றும் அழைக்கப் படுகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## மீயொலி வேக (மிக வேகமாக இயங்கும்) ஆயுதங்களை வைத்திருத்தல்

- மிக வேகமாக இயங்கும் ஆயுதங்களை வைத்திருக்கும் உலகில் உள்ள ஒரே நாடு ரஷ்யா மட்டுமேயாகும்.
- ரஷ்ய நாட்டின் அதிபரான விளாடிமிர் புடின் மாஸ்கோவில் நடத்தப்பட்ட மூத்த இராணுவ அதிகாரிகளின் கூட்டத்தில் புதிய சிர்கான் ஏவுகணையை அறிமுகப் படுத்தினார்.
- சிர்கான் ஏவுகணையானது ஒலியின் வேகத்தை விட 10 மடங்கு வேகமாக, நிலத்திலிருந்து நிலத்தை நோக்கிப் பறக்கும் திறன் கொண்டது. இது 2,000 கிலோ மீட்டருக்கும் அதிகமான தொலைவு கொண்ட இலக்க வரம்பை (1,250 மைல்) கொண்டுள்ளது.
- இது அணு ஆயுதங்கள் அல்லது வழக்கமான போர் ஆயுதங்களை சுமந்து கொண்டு பறக்கும் திறன் கொண்டது.
- சமீபத்தில் சீனா தனது மீயொலி வேக விமானத்தை சோதனை செய்தது.

## 17வது இந்திய - ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு – 2020

- 17வது இந்திய - ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடானது பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் நடத்தப் பட்டது.
- இது ஐரோப்பாவுடன் உத்தி சார்ந்த ஒத்துழைப்புகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த உச்சி மாநாடானது இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒப்பந்தம் (Bilateral Trade and Investment Agreement - BTIA), ஐரோப்பிய காவல்துறை, பயங்கரவாத எதிர்ப்பு, ஐரோப்பிய அணுசக்தித் துறை, காலநிலை மாற்றம் போன்ற பகுதிகளின் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.
- முன்னதாக 13வது இந்திய - ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடானது 2016 ஆம் ஆண்டில் பிரஸ்ஸல்ஸில் நடத்தப்பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## டிஜிட்டல் பரிவர்த்தனைகள் - PPI

- சிறிய மதிப்பிலான டிஜிட்டல் பரிவர்த்தனைகளை அதிகரிக்கும் பொருட்டு, ரிசர்வ் வங்கியானது பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிவர்த்தனைக்காக ரூ. 10,000 வரை உச்ச வரம்பு கொண்ட பகுதியளவு கட்டுப்படுத்தப் பட்ட முன்செலுத்து கட்டணக் கருவியை (prepaid payment instrument - PPI) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது கட்டணங்கள் மற்றும் தீர்வு முறைகள் சட்டம், 2007ன் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## இந்தியாவில் வங்கித் துறையின் போக்கு மற்றும் முன்னேற்றம் 2018 - 19

- "இந்தியாவில் வங்கித் துறையின் போக்கு மற்றும் முன்னேற்றம் 2018-19" என்ற ஒரு அறிக்கையை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.
- இது 2018 - 19 மற்றும் 2019 - 2020 ஆகிய காலப் பகுதியில் கூட்டுறவு வங்கிகள் மற்றும்

வங்கி சாரா நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட வங்கித் துறையின் செயல்பாடுகளைப் பதிவு செய்கின்றது.

- இந்த அறிக்கையின் படி, 2018 - 19 நிதியாண்டில் அதிக எண்ணிக்கையிலான மோசடி வழக்குகள் பொதுத் துறை வங்கிகளில் பதிவாகியுள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மிக் - 27 ரகப் போர் விமானம் பணியிலிருந்து ஓய்வு

- ராஜஸ்தானின் ஜோத்பூர் விமானத் தளத்தில் மிக் - 27 (மைக்கோயன் மிக் -27) ரகப் போர் விமானமானது (கடைசி விமானம்) இந்திய விமானப் படையிலிருந்து விலக்கப் பட்டது.
- இந்த விமானமானது கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய விமானப் படையில் பணியாற்றியது.
- இந்த விமானமானது 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற கார்கில் போரின் போது பயன்படுத்தப்பட்டது.
- இது இந்தியாவில் 'பகதூர்' என்ற பெயரில் அறியப் படுகின்றது.
- 2001/02 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையேயான விவகாரமான பராக்கிரமம் என்ற ராணுவ நடவடிக்கையிலும் இது பங்கேற்றது.
- இது 1985 ஆம் ஆண்டில் இந்திய விமானப் படையில் அறிமுகப் படுத்தப் பட்டது.



## சீனா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளின் செயற்கைக்கோள் – CBERS - 4A

- சீனா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் "சீனா - பிரேசில் புவி வளச் செயற்கைக்கோள் - 4A (CBERS - 4A)" எனப் பெயரிடப்பட்ட புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோளை கூட்டாக இணைந்து உருவாக்கியுள்ளன.

- இது வடக்கு சீன மாகாணமான ஷாங்க்சியில் இருந்து லாங் மார்ச் - 4 பி என்ற விண்கலத்தின் மூலம் ஏவப் பட்டது.
- பிரிக்ஸ் நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டமான "இரு தரப்புத் திட்டத்தின்" கீழ் மற்ற 8 செயற்கைக் கோள்களுடன் இந்த செயற்கைக் கோளும் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- தற்போது, பிரிக்ஸ் அமைப்பில் உள்ள நாடுகளில் தனக்கென்று சொந்தமாக செயற்கைக் கோள்கள் இல்லாத ஒரே நாடு தென்னாப்பிரிக்கா மட்டுமேயாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இராணுவ வடிவமைப்பு அமைப்பின் சிறப்புத்துவ விருது

- இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதியான பிபின் ராவத் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட 'சர்வாத்ரா கவாச்' என்ற கவச ஆடைக்காக படைத் தளபதியான அனூப் மிஸ்ரா என்பவருக்கு இராணுவ வடிவமைப்பு அமைப்பின் (Army Design Bureau - ADB) சிறப்புத்துவ விருதை வழங்கினார்.
- சர்வத்ரா கவாச் என்பது துப்பாக்கியால் சுடப்படும் எஃகுத் தோட்டாக்கள் உட்பட பல்வேறு வெடி மருந்துகளுக்கு எதிராக ராணுவ வீரர்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் ஒரு குண்டு துளைக்காத கவச ஆடையாகும்.




## விஸ்டனின் கடந்த பத்து ஆண்டுகளுக்கான ஐந்து கிரிக்கெட் வீரர்கள்

- விஸ்டன் கிரிக்கெட் வீரர்கள் அல்மானக் என்ற அமைப்பானது (விஸ்டன்) "விஸ்டனின் கடந்த பத்து ஆண்டுகளுக்கான ஐந்து கிரிக்கெட் வீரர்கள்" கொண்ட பட்டியலை அறிவித்துள்ளது.
- இந்தப் பட்டியலில் பெயரிடப்பட்ட ஒரே இந்தியர் இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவரான விராட் கோலி ஆவார்.
- இது ஒரு கிரிக்கெட் குறிப்புப் புத்தகமாகும். இது "கிரிக்கெட்டின் பைபிள்" என்றும் அழைக்கப் படுகின்றது.
- இதன் முதலாவது பட்டியல் 1864 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது.

### ஐசிசியின் ஆண்களுக்கான டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை

- சமீபத்தில் சர்வதேச கிரிக்கெட் மன்றத்தின் (International Cricket Council - ICC) டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையானது வெளியிடப் பட்டது.
- இந்தப் பட்டியலில் பேட்டிங் தரவரிசையில் இந்திய கிரிக்கெட் அணித் தலைவரான விராட் கோலி முதலிடத்தில் உள்ளார்.
- இந்தப் பட்டியலில் ஆல் ரவுண்டர் பிரிவில் ரவீந்திர ஜடேஜா 2வது இடத்தில் உள்ளார்.

| அணி | பேட்டிங் | பந்து வீச்சு | ஆல் ரவுண்டர் |
|---|---|---|---|
| இந்தியா | விராட் கோலி | பாட் கம்மின்ஸ் | ஜேசன் ஹோல்டர் |
| நியூசிலாந்து | ஸ்டீவ் ஸ்மித் | காகிசோ ராபாடா | ரவீந்திர ஜடேஜா |
| தென் ஆப்பிரிக்கா | கேன் வில்லியம்சன் | நீல் வாக்னர் | பென் ஸ்டோக்ஸ் |
| | **இந்திய வீரர்கள்** | | |
| - | சேடேஷ்வர் புஜாரா – 4வது இடம் | ஜஸ்பிரீத் பும்ரா - 6வது இடம் | ரவிச்சந்திரன் அஸ்வின் - 6வது இடம் |
| - | அஜிங்கியா ரஹானே – 7வது இடம் | ரவிச்சந்திரன் அஸ்வின் - 11வது இடம் | முகமது சமி - 29வது இடம் |

# விளையாட்டுச் செய்திகள்

### 6வது சர்வதேசக் கோப்பை (பளு தூக்குதல்) – 2019

- கத்தார் பளு தூக்குதல் சர்வதேசக் கோப்பை - 2019ன் 6வது பதிப்பானது கத்தாரின் தோஹாவில் நடத்தப்பட்டது.
- இந்த நிகழ்வானது சர்வதேசப் பளு தூக்குதல் கூட்டமைப்பின் (International Weightlifting Federation - IWF) கீழ் உள்ள கத்தார் பளு தூக்குதல் கூட்டமைப்பினால் (Qatar Weightlifting Federation - QWF) நடத்தப் பட்டது.
- ஜெர்மி லால்ரின்னுங்கா என்பவர் சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் அனைத்துப் பிரிவிலும் அவரது பெயரில் இருந்த 27 சாதனைகளை முறியடித்தார்.
- இவர் 12 சர்வதேச சாதனைகள் (மூன்று இளையோர் உலகப் போட்டி, மூன்று இளையோர் ஆசிய, ஆறு காமன்வெல்த் சாதனைகள் உட்பட) மற்றும் 5 தேசிய இளையோர் சாதனைகளுடன் 5 இளையோர் தேசிய மற்றும் 5 மூத்த தேசிய சாதனைகளையும் முறியடித்துள்ளார்.
- இந்திய வெற்றியாளர்கள் பின்வருமாறு:

| வரிசை எண் | வெற்றியாளர் | பிரிவு | பதக்கம் |
|---|---|---|---|
| **1** | சாய்கோம்: மீராபாய் சானு | பெண்களுக்கான 49 கிலோ எடைப்பிரிவு | தங்கம் |
| **2** | ஜெர்மி லால்ரின்னுங்கா | ஆண்களுக்கான 67 கிலோ எடைப்பிரிவு | வெள்ளி |

| | | | |
|---|---|---|---|
| **3** | ராக்கி ஹால்டர் | பெண்களுக்கான 64கிலோ எடைப்பிரிவு | வெண்கலம் |

## ஃபிஃபா ஆண்டின் சிறந்த அணி

- 2019 ஆம் ஆண்டிற்கான உலகத் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளதால், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, 2019 ஆம் ஆண்டின் ஃபிஃபாவின் சிறந்த அணியாக பெல்ஜியம் அணி அறிவிக்கப் பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் பெல்ஜியத்தைத் தொடர்ந்து பிரான்சு, பிரேசில், இங்கிலாந்து மற்றும் உருகுவே ஆகிய அணிகள் 2வது, 3வது, 4வது, மற்றும் 5வது இடங்களைப் பிடித்துள்ளன.
- பத்தாண்டுகளுக்கான ஒரு புதிய முதலாவது ஃபிஃபா தரவரிசையானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 அன்று வெளியிடப்பட இருக்கின்றது.

# இதரச் செய்திகள்

## நீடித்த வளர்ச்சி இலக்கு இந்தியக் குறியீடு மற்றும் முகப்புப் பலகை 2019 – 20

- நிதி ஆயோக் ஆனது நீடித்த வளர்ச்சி இலக்கு (Sustainable Development Goals - SDG) இந்தியக் குறியீடு மற்றும் முகப்புப் பலகை 2019 – 20 என்பதன் இரண்டாவது பதிப்பை வெளியிட இருக்கின்றது.
- SDG இந்தியக் குறியீட்டின் முதலாவது பதிப்பானது 2018 ஆம் ஆண்டு டிசம்பரில் வெளியிடப் பட்டது.
- எந்தவொரு பெரிய நாட்டினாலும் உருவாக்கப்படாத, நாட்டில் உள்ள மாநிலங்கள் அளவில் SDGகளை அடைவதற்கான செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட முதலாவது கருவி இதுவாகும்.
- நீடித்த வளர்ச்சி இலக்கு இந்தியக் குறியீடு மற்றும் முகப்புப் பலகை 2019 – 20 ஆனது 2030 ஆம் ஆண்டின் SDG இலக்குகளை அடைவதற்காக இந்தியாவில் உள்ள மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளைப் பதிவு செய்கின்றது.
- இது இந்தியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் பிரிவு மற்றும் உலகளாவியப் பசுமை வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து மத்தியப் புள்ளிவிவர மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★